# கிறிஸ்தவ வாழ்க்கை

Transcribed from a message spoken in June, 2013 in Chennai

By *R.S.Milton*

## சிரத்தையான வாழ்க்கை

தேவனுடைய காரியத்தில் நாம் சிரத்தையாகவும், முழு இருதயத்தோடும், முற்றுமுடிவாகவும் இருக்க வேண்டும். (serious, wholehearted, and absolute). ஒரு பக்கம், நாம் சாதாரணமான மனிதர்கள். ஆனால், இன்னொரு பக்கம், நாம் தேவனுடைய பரிசுத்த ஆவியினால் மீண்டும் ஜெநிப்பிக்கப்பட்ட வர்கள். நாம் தேவனுடைய ஜீவனை உடையவர்களாக இருக்கிறோம். எனவே, நாம் தேவனுடைய பிள்ளைகள். ஆனால், இந்தப் பூமியில் பல சமங்களில் நாம் தேவனுடைய பிள்ளைகளாக நடப்ப தில்லை. மாறாக, சாதாரண மனிதர்களாகவே நடக்கிறோம். "பொறாமையும், வாக்குவாதமும், பேத கங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால் நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷ மார்க்க மாய் நடக்கிறீர்களல்லவா?" (1 கொரி. 3:3) என்று பவுல் கூறுகிறார். கொரிந்தியர்கள் விசுவாசிகள். ஆனால், சாதாரண மனிதர்களைப்போல் நடந்துகொண்டார்கள். எனவே, பவுல் அவர்களை நோக்கி, "நீங்கள் தேவனுடைய பிள்ளைகள், ஆனால், சாதாரண மனிதர்களைப்போல் நடக் கிறீர்கள்," என்று சொல்லுகிறார். விசுவாசிகள் சாதாரண மனிதர்கள் இல்லை என்பதுதான் பவுலின் எண்ணம். நாம் தேவனுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறோம். நமக்குள் இருக்கும் கிறிஸ்துவின் வளர்ச்சி குறைவாக இருப்பதால் அல்லது நம்முடைய வளர்ச்சி குறைவாக இருப்பதால் பெரும்பாலான நேரங்களில் நாம் சாதாரண மனிதர்களைப்போல் நடக்கிறோம், வாழ்கிறோம்.

நாம் ஒரு வீட்டில் கூடிவருகிறோம் என்று வைத்துக்கொள்வோம். 'இது வீடுதானே| என்று நினைப்பது சாதாரண மனிதர்களின் எண்ணம். நாம் ஆவிக்குரிய மனிதர்களென்றால், தேவனுடைய மக்கள் ஓர் இடத்தில் கூடிவந்தால் எப்படிப்பட்ட சிரத்தையோடும், பயபக்தியோடும் நடந்துகொள்வார்களோ அப் படிப்பட்ட சிரத்தையோடும், பயபக்தியோடும் நாம் நடந்துகொள்வோம். இது தேவனுடைய பரிசுத்த வான்கள் கூடிவருகிற இடம், நேரம். பரிசுத்தவான்களுக்குரிய கனத்தை நாம் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். அவர்கள் உட்காருகிற இடம், ஜன்னல்கள், கம்பிகள், கழிவறை, பயன்படுத்து கிற பாத்திரம் எல்லாம் சுத்தமாக இருக்க வேண்டும். நம்முடைய வீட்டிலே ஒருவேளை நாம் ஏனோ தானோவென்று வாழ்ந்தாலும் குறைந்தபட்சம் தேவனுடைய வீட்டில், தேவனுடைய பரிசுத்தவான் களோடு நாம் வாழ்கிற வாழ்க்கையைச் சிரத்தையோடு வாழ ஆரம்பிக்க வேண்டும். இது கொஞ்சம் கடினம்தான். நம்முடைய வீடுகளில் நாம் ஒரு மாதிரி வாழும்போது தேவனுடைய வீட்டிலும் நாம் அப்படித்தான் வாழ்வோம். தேவனுடைய வீட்டில் எப்படி நடக்க வேண்டும் என்று பவுல் தீமோத்தேயு வுக்கு எழுதுகிறார் (1 தீமோ. 3:15). சாதாரணமான மனிதர்களைக் குறிக்க புதிய ஏற்பாடு பயன்படுத் துகிற வார்த்தை 'ஆத்தும மனிதர்கள்' அல்லது 'மாம்சப்பிரகாரமான மனிதர்கள்' அல்லது 'இயற்கை யான மனிதர்கள்' அல்லது 'சுயத்தை மையமாக வைத்து வாழும் மனிதர்கள்.' இப்படிப்பட்ட மனி தர்கள் தேவனுடைய பரிசுத்தவான்கள் கூடிவருகிற இடத்தைச் சுத்தம்பண்ண வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கலாம்.

## ஆவிக்குரிய மனிதர்கள்

பாடுவதில், ஜெபிப்பதில், தேவனுடைய வசனத்தை வாசிப்பதில், படிப்பதில், பந்தியாகிய அன்பின் விருந்தை ஒழுங்குசெய்வதில், வருவதில் போவதில் நாம் சிரத்தையாக இருக்க வேண்டும். நாம் சாதாரண மனிதர்களாக அதாவது இயற்கையான மனிதர்களாக வாழ்வது சுலபம். அதைத்தான் நாம் விரும்புவோம். மக்களை motivate பண்ணுவது எப்படி? என்ன காரணத்துக்காக நாம் ஆவிக்குரிய மனிதர்களாக வாழ வேண்டும்? தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் என்பதற்காகவா? அது உண்மை தான்.

ஒருவன் தேவனுடைய மக்கள் கூடிவருகிற இடத்திலுள்ள ஜன்னல்கள், கதவுகள், கம்பிகள் எல்லா வற்றையும் சனிக்கிழமை காலைதோறும் துடைப்பானாம். அதற்குரிய ஆசீர்வாதத்தைத் தேவன் அவ னுக்குக் கொடுப்பார் என்பது நிச்சயம், உறுதி. இப்படிச் செய்யவில்லையென்றால் தேவன் ஆசீர் வதிக்கமாட்டாரா என்று பகுத்தறிவோடு நாம் விவாதிக்கலாம்.

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்" (யோவான் 12:26) என்று என்னால் உறுதியாகச் சொல்லமுடியும். "நான் தேவனைச் சேவிக்கிறவன்" என்கிற இருதயம்

நமக்கு இருக்க வேண்டும். நம் முழு வாழ்க்கையும் தேவனைச் சேவிப்பதற்காகவே. "இந்தப் பூமியில் நான் தேவனுடைய வேலைக்காரனாக வாழ விரும்புகிறேன். ஆனால், இந்தப் பூமியில் எனக்கு வேறு பல வேலைகள் உள்ளன. வேறு பல ஈ:டுபாடுகள் உள்ளன. படிக்கவேண்டும், நல்ல வேலை பார்க்க வேண்டும், நிறைய சம்பாதிக்க வேண்டும், வியாபாரம் செய்ய வேண்டும். இப்படி பல ஏக்கங்கள் என் வாழ்க்கையில் உள்ளன. கூடவே, நான் நல்ல கிறிஸ்தவனாகவும் வாழ விரும்புகிறேன்," என்று நினைப்பது தவறு. அது மட்டும் அல்ல. இப்படிப்பட்டவர்கள் தேவனிடத்தில் வருவதே எதற்காகத்தான்? "என் படிப்பை ஆசீர்வதியும், நல்ல வேலையைத் தாரும். அதன்பின் தந்த வேலையை ஆசீர்வதியும், நான் ஒரு நல்ல நாட்டில் வாழ வேண்டும், எனக்குப் பணம் வேண்டும், எனக்கு ஒரு கணவன் வேண்டும், மனைவி வேண்டும், ஒரு வீடு வேண்டும்," என்பதுதான் அவர்கள் தேவனிடத்தில் நாடுகிற ஆசீர்வாதமாக இருக்கும். "இம்மைக்காக மாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப் பார்க்கிலும் பரிதபிக்கப் பட்டவர்களாயிருப்போம்" (1 கொரி. 15:19). இந்தப் பூமிக்குரிய காரியங்களுக்காக மட்டும் நாம் கிறிஸ்துவை விசுவாசித்தால் நாம் அவிசுவாசிகளைவிட மோசமானவர்கள், பரிதாபத்துக்குரியவர்கள். ஏனென்றால், அவர்கள் கடவுள் என்று கற்பனை செய்து கொள்கிறவர்களிடத்தில் இதே காரியங்களுக்காகத்தான் போகிறார்கள். "என் பிள்ளைக்கு நல்ல படிப்பு வேண்டும், நல்ல வேலை வேண்டும். நல்ல கணவன் வேண்டும், நல்ல மனைவி வேண்டும்." அவர்களுக்கு இதைவிட உயர்வான, மேலான ஏக்கம், தேடல் வேறொன்றும் இல்லை. நம்முடைய ஏக்கமும், வாஞ்சையும், விருப்பமும் இதுதான் என்றால் நாம் அவிசுவாசிகளிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. "அவர்கள் எப்படிப்பட்ட சௌகரியத்தோடும், வசதிகளோடும், வெற்றியோடும், சுபிட்சத்தோடும் வாழ்கிறார்களோ அதேபோல நானும் சௌகரியமாக, வசதியாக, வெற்றியாக, சுபிட்சமாக வாழ வேண்டும். ஆனால், நான் கிறிஸ்தவனாக இருக்க வேண்டும்," என்றால் அது தேவனுக்குப் பிரியமான நிலை என்று நாம் நினைக்கக்கூடாது. அது மிகவும் சாதாரண காரியம். மாறாக, "இந்தப் பூமியில் என் முழு வாழ்க்கையும் தேவனுடைய வேலைக்காரனாக, தேவனுடைய பிரதிநிதியாக, வாழ்வதுதான். அப்படி தேவனுடைய வேலைக்காரனாக வாழ்வதில் படிப்பது அடங்கும் என்றால் நான் படிப்பேன். தேவனுடைய வேலைக்காரனாக வாழ்வதில் வேலை பார்ப்பது அடங்கும் என்றால் நான் வேலை பார்ப்பேன். தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதில் திருமணம் செய்வது அடங்கும் என்றால் நான் திருமணம் செய்வேன். தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதில் நான் ஒரு வீடு கட்டுவது அடங்கும் என்றால் வீடு கட்டுவேன். தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதில் வீடு கட்டுவது அடங்கவில்லையென்றால் வீடு கட்டவேண்டிய அவசியம் இல்லை."

சகோதரன் சகரியா பூனன் இப்படிச் சொல்லி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். வீட்டை விட்டு வெளியே போயிருக்கும்போது அவருக்கு இப்படிப்பட்ட ஒரு எண்ணம் வருமாம்: "என் வீடு எரிந்து போயிருந்தால் நான் எப்படி இருப்பேன்? என் மனம் எப்படி இருக்கும்? பரவாயில்லை. நான் சமாதானமாக இருப்பேன்." அவிசுவாசத்தினாலல்ல. புதிதாக வீடு கட்டியபின் அந்த வீட்டின்மேல் ஒரு அபிமானம் இருக்கும். "என் வாழ்க்கையில் ஒன்றைச் சாதித்துவிட்டேன்," என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும். அதைப் பார்த்து பார்த்து மகிழ்வோம். ஒரு சைக்கிள் வாங்கினால், ஒரு கார் வாங்கினால், பார்த்துப் பார்த்து மகிழ்வோம். முதல் கீறல் விழுந்தவுடன் இருதயத்தில் கீறல் விழுந்ததுபோன்ற எண்ணம் ஏற்படும். வீடு கட்டியபின் சுவர் அழுக்காகிவிட்டால் மனம் புண்படும்.

## தேவனுடைய வேலைக்காரன்

இந்தப் பூமியில், இந்தப் பிரபஞ்சத்தில், தேவன் என்ன நோக்கத்தை, என்ன குறிக்கோளை, நிறைவேற்ற விரும்புகிறார்? என்ன நோக்கத்திற்காக, என்ன குறிக்கோளுக்காக, தேவன் இந்தப் பூமியில் வேலைசெய்து கொண்டிருக்கிறார் என்பதை நாம் தெளிவாகப் பார்க்க வேண்டும், அறிந்து கொள்ள வேண்டும். அது நம் தரிசனமாக இருக்க வேண்டும். இல்லையென்றால் நாம் தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்க முடியாது. தேவனுடைய வேலைக்காரனாக அல்லது வேலைக்காரியாக இருப்பது அவ்வளவு உற்சாகமாக இருக்காது. "நீங்கள் சரியாக பத்து மணிக்கு வாருங்கள். தேவன் உங்களுக்கு நல்ல வேலை தருவார்," என்று வேலை தேடிக்கொண்டிருக்கும் ஒருவனிடம் சொன்னால் அது அவனுக்கு உற்சாகத்தைத் தரும். ஏனென்றால், அங்கு பலன் இருக்கிறது. என்ன பலன்? அவர் வேலை தருவார். "பிரதர், உங்கள் வீட்டில் ஒரு ஜெபக்கூட்டம் ஆரம்பியுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். உங்கள் வீட்டின் எல்லையை விசாலமாக்குவார்," என்றால் உடனே மக்கள் செய்வார்கள். ஏனென்றால், அதில் ஒரு incentive இருக்கிறது. ஆனால், நீங்கள் தேவனுடைய வேலைக்காரர்களாக இருக்க விரும்புகிறீர்களா? ஓ! இது கஷ்டமான வேலையாச்சே! ஏனென்றால் அவருடைய வேலைக்காரர்களாக இருந்தால், அதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது? இந்த உலகத்தில் எது

மகிழ்ச்சியைத் தரும்? நல்ல உணவு, நல்ல உடை, பொழுதுபோக்கு, விளையாட்டுக்கள் மகிழ்ச்சியைத் தரும். கதைப் புத்தகம் படிப்பது, மக்களோடு அளவளாவுவது, பிள்ளைகள் நன்றாகப் படிப்பது மகிழ்ச்சியைத் தரலாம். அவர்களுக்கு நல்ல வேலை இருந்தால், நல்ல வருமானம் இருந்தால், நல்ல கணவன், மனைவி இருந்தால் அது மகிழ்ச்சியைத் தரலாம். நல்ல வீடு இருந்தால் மகிழ்ச்சியைத் தரலாம். தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதில் என்ன மகிழ்ச்சி இருக்கிறது? **தேவன் தம்மையே உங்களுக்குத் தருவார்.**

ஒருவன் தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதற்குத் தன் முழு இருதயத்தோடு தன்னை ஒப்புக்கொடுத்திருந்தால், அவன் தேவனுடைய சார்பாக மற்றவர்களுக்கு உதவுகிறான். "இதைச் செய்யுங்கள் அல்லது செய்ய வேண்டாம். தேவன் உங்களை விடுவிப்பார். நெருக்கத்திலிருந்து உங்களை விடுதலையாக்குவார், தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்," என்று அவன் சொல்லும்போது அதன்படி நாம் செய்தால் அல்லது செய்யாமலிருந்தால் தேவன் அதை அங்கீகரிப்பார். இப்படிப்பட்டவன் சொல்வதற்கும், செய்வதற்கும் தேவன் "ஆம்" என்று சொல்வார். "நீ சொல்வதை நான் ஆமோதிக்கிறேன்," என்று அவர் சொல்லுவார். "சாமுவேல் வளர்ந்தான், கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்துபோக விடவில்லை" (1 சாமுவேல் 3:19). சாமுவேல் பேசியதையெல்லாம் தேவன் நிறைவேற்றினார். அவர் பேசின ஒரு வார்த்தையைக்கூட தேவன் நிறைவேற்றாமல் விடவில்லை. அவர் பேசின ஒரு வார்த்தையையாகிலும் தேவன் தரையில் விழவிடவில்லை. நம்முடைய அனுபவம் என்ன? நாம் பேசுகிற 90 சதவிகித வார்த்தைகள் தரையில்தான் விழும். நாம் பேசுகிற வார்த்தையைத் தேவன் தாங்க வேண்டும். "என் வேலைக்காரன், என் உத்தம வேலைக்காரன், பேசியிருக்கிறான். எனவே, நான் அதைத் தரையில் விழவிடமாட்டேன். நான் இதைச் செய்வேன். நான் இதை நிறைவேற்றுவேன்," என்று தேவன் சொல்ல வேண்டும். சாமுவேலுக்கு மட்டும் அல்ல. எரேமியாவிலும் இதே காரியத்தைப் பார்க்கிறோம். "நான் இதைப் பேசியிருக்கிறேன். எனவே, நான் இதைச் செய்வேன்," என்று தேவன் சொல்லுகிறார். இதைத்தான் யோவான் 12இல் வாசிக்கிறோம். "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் பிதாவானவர் அவனைக் கனம் பண்ணுவார்." யோசித்துப்பாருங்கள்.

அரசியல் களம், சாத்தான் இந்த உலகத்தை ஆள்வதற்குப் பயன்படுத்துகிற ஒரு கருவி என்பது என் எண்ணம். இதன் பொருள் தேவன் தாம் என்ன செய்வதென்று தெரியாமல் பதறிக்கொண்டிருக்கிறார் என்பதல்ல. அவரே ராஜாக்களை ஏற்படுத்துகிறார், அவரே ராஜாக்களைத் தள்ளுகிறார். ஆனால், சாத்தான் தன் விருப்பம்போல் விளையாடுவதற்கு அவர் ஓரளவுக்கு அவனை விட்டு விடுகிறார். "சரி, அவன் தன்னால் முடிந்ததைச் செய்யட்டும்," என்று கொஞ்சம் அனுமதிக்கிறார். தம்முடைய நித்திய நோக்கங்களும், குறிக்கோளும் நிறைவேறுவதற்கு ஏதுவாக இருக்கிறவரைதான் அதை விடுவார். தேவைப்படும்போது அவர் அவனை overrule பண்ணிவிடுவார்.

நான் பஞ்சாயத்துக் கவுன்சிலர்களைப் பார்த்திருக்கிறேன். என் அறிவின்படி அரசியல் பதவிகளிலேயே இதுதான் மிகக் குறைந்த பதவி. அவர்கள் பயணம் செய்கிற வண்டியையும் பார்த்திருக்கிறேன். இந்த உலகத்தில் சாத்தானைச் சேவிப்பவர்களுக்கு அந்தக் கனம் கிடைக்கிறது. பிதாவானவரை ஒருவன் சேவித்தால், பணிவிடை செய்தால், பிதாவானவர் அவனைக் கனம் பண்ணுவார். "இந்த உலகத்தில் எல்லாவற்றையும் செலவழித்து படிக்க வேண்டும். எல்லாவற்றையும் கொடுத்து வேலை செய்ய வேண்டும். எல்லாவற்றையும் கொடுத்து பொருள்களைச் சேமிக்க வேண்டும். அப்போதுதான் இந்த உலகத்துக்குரிய நன்மைகள், ஆசீர்வாதங்கள், இன்பங்கள் நமக்குக் கிடைக்கும்," என்று மக்கள் நினைக்கிறார்கள். அப்படியல்ல. அது சாத்தானின் தந்திரம், சூழ்ச்சி.

நான் ஒன்று சொல்லுகிறேன். காலையில் 30 நிமிடம் முழங்காலில் நின்று ஜெபியுங்கள். நேர் முழங்காலில் நின்று ஜெபிப்பது கொஞ்சம் சங்கடமாக இருக்கும். அதுபோல இரவு தூங்கப் போவதற்கு முன் 30 நிமிடம் ஜெபியுங்கள். 24 மணி நேரம் இருக்கிறது. "ஜெபிக்க நேரம் இல்லை," என்ற முட்டாள்தனமான பதிலை நாம் யாரும் சொல்ல மாட்டோம் என்று நான் நினைக்கிறேன். அந்த அளவுக்கு நாம் வளர்ந்திருக்க வேண்டும். எப்போதாவது ஒருநாள் உடல்நலம் சரியில்லாமல் போகலாம். அப்போது ஜெபிக்கமுடியாமல் போகலாம். சில நெருக்கங்களில் முடியாமல் போகலாம். ஆனால், 365 நாட்களும் அப்படி இருக்க முடியாது. "பிரதர் காலையில் வேலைக்குப் போய்விட்டு மாலையில்தான் வீட்டுக்கு வருகிறேன். ஜெபிக்கவோ அல்லது வேதம் வாசிக்கவோ முடியவில்லை," என்ற பதிலைச் சொன்னால் என் பதில் என்ன தெரியுமா? எகிப்தின் பார்வோன் மன்னன் எபிரேய மக்களை எப்படி அடிமைப்படுத்தி வைத்திருந்தானோ அதுபோல் இந்த உலகத்தின் பார்வோனாகிய, அதிபதியாகிய சாத்தான் இவர்களை அடிமைப்படுத்தி வைத்திருக்கிறான் என்று பொருள். தேவனை

ஆராதிக்க அவர்களுக்கு நேரம் இல்லை. மோசே பார்வோனிடம் சென்று, “நாங்கள் தேவனை ஆராதிப்பதற்குச் செல்ல வேண்டும்,” என்று கேட்கிறான். ஆனால், அதற்குப்பிறகுதான் பார்வோன், “முன்பு நீங்கள் செங்கல் சூளையில் வேலைபார்த்ததற்கு வைக்கோலாவது கூலியாகத் தந்தேன். இனிமேல் நான் அதைக்கூடத் தரமாட்டேன். அதையும் நீங்கள்தான் தேடிக்கொள்ள வேண்டும்,” என்று சொன்னான். முன்பு பார்வோனின் பட்டணங்களைக் கட்டுவதற்கு செங்கற்களைச் செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அவர்கள் வைக்கோலையும் தேட வேண்டும். யோசித்துப் பாருங்கள். அவர் களுடைய வாழ்க்கை எப்படி இருந்திருக்கும்? நேரமேயில்லை. பரபரப்பான வாழ்க்கை. இதற்குக் காரணம் என்ன? கிறிஸ்தவ வாழ்க்கையைக் குறித்தும், தேவனுடைய சபையைக் குறித்தும் சிரத்தையும், முழு இருதயமும், முற்றுமுடிவான இருதயமும் குறைவுபடுகிறது. Seriousness, whole heartedness, thoroughness. இந்தத் தவறுக்குள் நாம் விழுந்துவிடக் கூடாது.

“நான் செய்யப்போகிறதை ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?” என்று தேவன் சொல்லுகிறார். தேவன் சோதோமை அழிப்பதற்கு வருகிறார். ஆபிரகாம் தேவனுக்கு நல்ல விருந்து வைக்கிறான். விருந்துக் குப்பின் ஆபிரகாம் தேவனை வழியனுப்பப் போகிறான். ஒரு காரியத்தை நன்றாகக் கவனியுங்கள். பல சமயங்களில் நாம்தான், “தேவனே, உம்முடைய சித்தம் என்ன? நான் என்ன படிக்க வேண்டும்? என்ன வேலை செய்ய வேண்டும்? யாரைக் கல்யாணம் செய்ய வேண்டும்? எங்கு இடம் வாங்க வேண்டும்? என் பிள்ளையைக் குறித்த காரியம் என்ன? என் மனைவியைக் குறித்த காரியம் என்ன? என் கணவனைக் குறித்த காரியம் என்ன? எனக்கு நல்ல வேலை கிடைக்குமா கிடைக்காதா?” என்று தேவனை அலட்டுவோம். ஆனால், ஆபிரகாம் தேவனை அலட்டவில்லை? “என்ன காரியமாக வந்தீர்? எங்கு போகிறீர்?” என்று அவன் ஒன்றும் கேட்கவில்லை. “என் இருதயத்தில் இருக்கிறதை என் நண்பனாகிய ஆபிரகாமுக்கு மறைப்பேனோ?” என்று தேவனே சொல்லுகிறார். தேவனால் பொறுக்க முடியவில்லை.

இது தேவனுடைய நண்பனாக, தேவனுடைய வேலைக்காரனாக, இருப்பதன் பெரிய சிலாக்கியம், தாம் செய்யப்போவதை தேவன் உனக்குச் சொல்வார். இன்று மக்கள் குருவிக்காரர்களிடமும், ஜோசி யக்காரர்களிடமும் தங்கள் எதிர்காலத்தைக் குறித்துக் கேட்கிறார்கள். நாம் தேவனுடைய நண்பர் களாக இருந்தால் தேவன் அதை நமக்குச் சொல்வார். தேவனுடைய நண்பனாக இருப்பது பெரிய காரியம்.

நாம் தேவனுடைய வேலைக்காரர்கள் என்றால், முதலாவது நாம நம் எஜமானிடம் போக வேண்டும். காலையில் அரை மணி நேரமும், இரவில் அரைமணி நேரமும் நாம் முழங்காலில் நின்று ஜெபித் தால் (set apart quality time for the Lord. Be serious, whole hearted and thorough with the Lord) நாம் தேவனுடைய வேலைக்காரர்களாக இருந்தால், தேவனுடைய நண்பர்களாகவும் இருப்போம். இந்தப் பூமியில், நம்முடைய வாழ்க்கையிலும், நம்மோடு உறவு கொண்டிருக்கிறவர்களின் வாழ்க்கையிலும் - நம் பெற்றோர், உறவினர், பிள்ளைகள்-சகோதர சகோதரிகளின் வாழ்க்கையிலும் தேவன் என்ன செய்ய விரும்புகிறார், என்ன செய்யவிருக்கிறார் என்பதை அவர் நமக்குக் காண்பிப்பார். “இதைச் செய்” என்று தூண்டுவார். “இதைச் செய்யாதே” என்று எச்சரிப்பார்.

## முதல் யுத்தம், முதல் வெற்றி

நம்மால் ஏன் இப்படி ஜெபிக்க முடியவில்லை? காலை நேரம். நாம் எழும்பும் நேரம். அதுதான் ஆரம்பம். பொதுவாக அந்த ஓர் இடத்தில் சாத்தான் நம்மைத் தோற்கடிக்க விட்டுவிட்டால் பின்பு அதைத் தொடர்ந்து இரண்டாவது, மூன்றாவது என்று காரியங்கள் தொடர்ந்து பாதிக்கப்படும். இது சாத்தானின் தந்திரம். ஒருவேளை காலையில் 6 மணிமுதல் 6.30 மணிவரை நாம் தேவனுடன் நேரம் செலவழிக்கத் திட்டமிட்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். ஆனால், நான் 6.10க்குத்தான் விழிக்கிறேன் என்றால் காலையிலேயே நான் தோற்றுவிட்டேன் என்று பொருள். ஒன்று சொல்லு கிறேன். “பெரிய பாவத்தை வென்றேன். தேவனுக்காகப் பெரிய திட்டமிட்டு பெரிய வெற்றி பெற் றேன்,” என்று சொல்வதற்குமுன் காலையில் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி அந்த நேரத்தில் எழுந்திருப்பதுதான் முதல் வெற்றி. இந்த வெற்றியைப் பெற்றுவிட்டால், இதை ஒவ்வொரு நாளும் செய்ய முடியும் என்றால், தேவனைப் பொறுத்தவரை அவன் மிகத் திடமான வேலைக்காரன். ஒருவேளை சில நாட்கள் நாம் இதைச் செய்ய முடியும். ஆனால், ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டும். இது கடினம். காலையில் எழுந்தவுடன் எல்லாம் முடிந்துவிடுவதில்லை.

### எல்லை வேண்டும்

இன்னொரு காரியம். அது என்னவென்றால் சில வேலைகளுக்கு நாம் நேரத்தை மட்டுப்படுத்த வேண்டும். "சில காரியங்களை இவ்வளவு நேரத்தில் முடிக்கப்போகிறேன்," என்று ஒரு கோடு போட்டுக்கொள்ள வேண்டும். படிப்பதற்கு ஒரு கோடு போட வேண்டும். படுக்கைக்கு ஒரு கோடு போட வேண்டும். கூட்டத்துக்கு ஒரு கோடு போட வேண்டும். கூட்டம் முடிந்தபிறகு குறிப்பிட்ட நேரத்தில் இந்த இடத்தை விட்டு நாம் போய்விட வேண்டும். "சகோதர சகோதரிகளைப் பார்த்துப் பேசி மெதுவாகப் போக வேண்டாமா?" என்று நினைக்கலாம். அப்படியல்ல. கோடு இருக்க வேண்டும். அப்படி கோடு போடவில்லையென்றால் அடுத்த காரியம் அடி வாங்கும். ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருக்கிற ஒரு வண்டி போகவில்லையென்றால் அடுத்தவண்டி அங்கு வருவது தாமதமாகும்.

நான் நேரத்தைக்குறித்து சிந்தித்து பார்ப்பது உண்டு. ஒரு கேள்வி வரும். நாமெல்லாரும் மேலாளர்களா? இல்லையே! மேலாளர்கள்தானே நேரத்தைக்குறித்துக் கவலைப்பட வேண்டும். அப்படியல்ல. "நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்" (எபே. 5:16).

எபேசியர் புத்தகம் மிக ஆழமான புத்தகம். அப்படிப்பட்ட புத்தகம் நேரத்தைப்பற்றிப் பேசுகிறது. நாம் ஞானமற்றவர்களாக இருக்கக்கூடாது. நேரத்தை அல்லது காலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.? தேவனுடைய சித்தம், கர்த்தருடைய சித்தம், இன்னதென்று அறிந்து அதில் மட்டும் நாம் நம் நேரத்தைச் செலவிட வேண்டும். கல்லூரிக்கு நான் அவசரம் அவசரமாக நடந்து போவேன். நம்மில் பலர் அப்படித்தான் நடந்து போவோம். "இயேசு கிறிஸ்து ஓடினார்" என்று புதிய ஏற்பாட்டில் ஒரு வசனம்கூட இல்லை. அதன் பொருள் 'அவர் கனத்த உருவம் கொண்டவர். எனவே அவர் மெல்ல நடந்து போனார்' என்பதல்ல. 'அவருக்குக் காலையில் சிற்றுண்டி சாப்பிடுவதற்கு நேரம் இல்லை. எனவே, அவர் கையில் சிற்றுண்டியை வைத்துக்கொண்டு ஓடிக்கொண்டே பேருந்தில் ஏறினார்' என்று எங்கும் வாசிக்க முடியாது.

நாம் ஏன் இதைப்பற்றி இப்போது பேச வேண்டும்? நேரத்தை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று தெரிந்தால் நாம் வெற்றியுள்ள மனிதர்களாக மாற முடியும் என்பதற்காகவா பேசிக் கொண்டிருக்கிறோம்? ஏன் பேசுகிறோம்? தேவனுடைய வேலைக்காரனாக இந்தப் பூமியில் வாழ வேண்டும். அதைப்போன்ற ஆசீர்வாதமான வாழ்க்கை வேறொன்றும் இல்லை. தேவனுடைய வேலைக்காரனாக இருப்பதென்றால் என்ன பொருள்? தேவன் தம்மை அவர்களிடம் ஒப்படைப்பார். தேவன் இந்தப் பூமியில் என்ன செய்ய விரும்புகிறார் என்பதை அவர்களிடம் சொல்வார். அதைப்போல ஒரு பாக்கியம் இந்தப் பூமியில் வேறொன்றும் இல்லை. அவர் என்ன செய்யப் போகிறார், என்ன செய்ய திட்டமிட்டிருக்கிறார் என்பதை உன்னிடம் சொல்லாமல் செய்ய மாட்டார். இது பெரிய பாக்கியம். இன்னும் சொல்லப்போனால், நம்முடைய வாழ்க்கையில், குடும்பத்தில் அல்லது நம்மோடு தொடர்புடையவர்களின் வாழ்க்கையில் எதையாவது செய்ய வேண்டுமானால் நம்மிடம் சொல்லாமல் அதைச் செய்யமாட்டார், எதையும் செய்யமாட்டார். அவர்களிடம் சொல்லாமல் எதையும் செய்ய மாட்டார், தாம் செய்யப்போவதை அவர்களிடம் சொல்வார். தேவனை நண்பனாகக்கொண்டு வாழ்கிற வாழ்க்கையைப்போன்ற அற்புதமான வாழ்க்கை வேறொன்றும் இல்லை.

### தேவன் நம் நண்பன்

தேவனை நண்பனாக்கிக்கொள்வது எப்படி? காலையில் ஒரு அரைமணி நேரம் முழங்காலில் நின்று அவருடன் நேரம் செலவழிப்பது. மாலையில் அரைமணி நேரம் முழங்காலில் நின்று அவரோடு நேரம் செலவழிப்பது, தேவனோடு உறவாடுவது, தேவனோடு கலந்து பேசுவது. இதை ஒவ்வொரு நாளும் செய்யும் பயிற்சி நமக்கு இருக்குமென்றால் நாம் தேவனுடைய நண்பர்களாக மாறுவோம். ஆனால், இந்த ஒரு காரியத்தை நம்மால் செய்ய முடியாது. நீங்கள் உங்கள் வாழ்க்கையின் பெரிய வெற்றி என்று எதைக் கருதுகிறீர்கள்? நல்ல வேலை கிடைத்துவிட்டால் அல்லது மேல்நாட்டில் உயர்படிப்புக்காக அனுமதி கிடைத்துவிட்டால் வாழ்க்கையின் பெரிய வெற்றி என்று சிலர் சொல்லலாம். ஒரு நல்ல வீடு வாங்கிவிட்டால் அதை வெற்றி என்று சிலர் கருதலாம். ஆனால், நான் சொல்லுகிறேன். பெரிய வெற்றி எது தெரியுமா? காலையில் அரைமணி நேரம் தேவனோடு செலவழிக்கமுடியும் என்றால், இதை ஒவ்வொரு நாளும் செய்ய முடியும் என்றால் அதைப்போன்ற மாபெரும் வெற்றி உங்கள் வாழ்க்கையில் வேறொன்றும் இல்லை. இந்த ஒரு போரில் நாம் தோற்றுப்போனால் மீதி எல்லாப் போர்களிலும் நாம் தோற்றுத்தான் போவோம். அப்படித் தோற்றுப் போகும்போது நாம் மனிதர்களோடு போராடுவோம். தாமதமாகிவிட்டால் நாம் மனிதர்களோடு போராடுவோம். அம்மாவோடு போராடுவோம்: "நான்தான் சாப்பிடமாட்டேன் என்கிறேனே! ஒரு நாள் சாப்பிடாவிட்டால் செத்தா போய்விடுவேன்? விடுங்கள் என்னை," என்று பெற்றோர்களுடன் போராடு

வார்கள். போராடுவத்றகுக் காரணம் என்ன? ஏற்கெனவே ஒரு மாபெரும் போரில் அவர்கள் தோற்று விட்டார்கள். எனவே, இப்போது இந்தச் சின்னச்சின்ன சண்டைகளில் எலிகளோடும், கொசுக்க ளோடும் போராடி வெற்றிபெறுகிறார்கள். நீங்கள் கேட்கலாம். "பிரதர், அரைமணி நேரம் ஜெபித்தால் சரியாகிவிடுமா?" ஆம், ஒவ்வொரு நாளும், சங்கீதம் 119ஐ வாசித்துப் பாருங்கள். தேவன் யாரையும் கண்ணை மூடிக்கொண்டு ஆசீர்வதிக்கவோ, பயன்படுத்தவோ இல்லை. அவர் பயன்படுத்தியவர்கள் அடிப்படையான பயிற்சியில் உண்மையுள்ளவர்களாக இருந்தார்கள்.

இந்த ஒரு காரியத்தை உங்களால் செய்ய முடிந்தால், உங்கள் தனிப்பட்ட வாழ்க்கை, உங்கள் குடும்ப வாழ்க்கை, சபை வாழ்க்கை ஆகியவைகளெல்லாம் ஆசீர்வாதமாக இருக்கும். ஒவ்வொரு போர்வீரனும் ஒவ்வொரு நாளும் தலைமை என்ன சொல்லுகிறது என்று உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். பல போர்களில் நாம் தோற்றுப்போவதற்குக் காரணம் என்ன? எங்கோ ஒரு போர்வீரன் தூங்கிக்கொண்டிருப்பான். ஒரு சமிக்ஞை வந்திருக்கும். அவன் விளையாட்டுத்தனமாக எங்கே யாவது எதையாவது செய்துகொண்டிருப்பான்.

காலையில் அல்லது இரவில் ஜெபிப்பது என்பது தேவன் இன்று என்ன பேச விரும்புகிறார், என்ன செய்யச் சொல்லுகிறார் அல்லது செய்யக்கூடாது என்று சொல்லுகிறார், எங்கு போகச் சொல்லு கிறார் அல்லது போகக்கூடாது என்று சொல்லுகிறார் என்று அவருடைய வழிகளை அறிந்துகொள் வதற்காக. என்றைக்காவது ஒருநாள் ஜெபிக்கும்போதே தேவன் பல காரியங்களை நமக்குச் சொல் கிறார் என்றால் தினமும் ஜெபித்தால் எவ்வளவு சொல்வார்? இது நம் அனுதின அனுபவமாக இருக்க வேண்டும். இது ஏதோ அத்திபூத்தாற்போன்ற அனுபவமாக இருக்கக்கூடாது. இது தேவ னுடைய மக்களின் அன்றாட அனுபவமாக இருக்க வேண்டும்.

### எலிசாவின் அனுபவம்

எலிசாவின் வரலாற்றைப் பார்க்கிறோம். சூனேமுக்குப் போகும்போதெல்லாம் அங்கு ஒரு சீமாட்டி எலிசா தீர்க்கதரிசியை உபசரிக்கிறாள். சூனேமியாளுக்குக் குழந்தை இல்லை. "கர்த்தர் உனக்கு ஒரு குழந்தையைத் தந்து உன்னை ஆசீர்வதிப்பார்," என்று அவர் கூறுகிறார். அவள் சிரிக்கிறாள். "கர்த் தர் தருவார் என்ற ஆசையை நான் விட்டுவிட்டேன்," என்று அவள் சொல்லுகிறாள். கர்த்தர் தருவார் என்று தீர்க்கதரிசி கூறுகிறார். அவளுக்குக் குழந்தை பிறக்கிறது. அவன் வளர்ந்து பெரிய வனா கிறான். ஒருநாள் அவன் இறந்துவிடுகிறான். அவள் குழந்தையை வீட்டில் வைத்துவிட்டு எலிசாவைப் பார்க்கப் போகிறாள். முதலில் கேயாசியைப் பார்க்கிறாள். எல்லாரும் நலமாயிருக் கிறார்கள் என்று சொல்லுகிறாள். எலிசாவைப் பார்த்தவுடன் அவருடைய காலில் விழுந்துவிடுகிறாள். அப்போது எலிசாவின் வேலைக்காரனாகிய கேயாசி அவளைத் தடுக்கிறான். அப்போதுதான் நிலைமை எலிசா வுக்குப் புரிகிறது. உடனே அவர், "அவளைத் தடுக்காதே, அவள் ஆத்துமா துக்கமாயிருக்கிறது. கர்த்தர் அதை எனக்கு அறிவியாமல் மறைத்து வைத்தார்," என்று சொல்லுகிறார் (2 இரா. 4:27). அவளுடைய உண்மையான நிலைமை தனக்குத் தெரியாததை எலிசா தீர்க்கதரிசி அசாதாரணமான காரியமாகக் கருதுகிறார். அவள் என்ன காரியமாக வருகிறாள் என்று அவருக்குத் தெரிவதுதான் அவருடைய சாதாரணமான அனுபவம். தெரியாதது அசாதாரணமான அனுபவம்.

"அவர் தீர்க்கதரிசி. எனவே, தேவன் அவருக்குச் சொல்வார். நாம் சாதாரணமானவர்கள்," என்று நாம் நினைக்கலாம். மற்றவர்களைப்பற்றிய ஆயிரம் காரியங்களைத் தேவன் நமக்குச் சொல்லாமல் போகலாம். ஆனால், நம்மைப்பற்றிய காரியங்களைத் தேவன் நமக்குச் சொல்வார். அப்போது தேவ னுடைய உத்தம வேலைக்காரர்கள் என்ற முறையில், உண்மையான நண்பர்கள் என்ற முறையில், நாம் தேவனுக்காகப் பல வெற்றிகளைப் பெற முடியும். தோற்றுப்போக மாட்டோம்.

### தடைகள்

இதற்குத் தடையாக இருக்கும் காரியங்கள் என்ன? காலையில் குறித்த நேரத்தில் எழுந்திருக்காமல் போவதுதான் முதலாவது தடை. ஒரு கிறிஸ்தவனின் வாழ்க்கையில் இதுதான் முதல் போர். உன் தூக்கத்தின்மேல் அல்லது படுக்கையின்மேல் நீ பெறும் வெற்றிதான் உன் கிறிஸ்தவ வாழ்க்கையின் முதல் வெற்றி. "முந்தி நான் சுருட்டு குடித்தேன், இப்போது நான் சுருட்டு குடிப்பதில்லை. முன்பு நான் சாராயம் குடித்தேன், இப்போது நான் சாராயம் குடிப்பதில்லை. முன்பு நான் சண்டை போட்டேன், இப்போது நான் சண்டைபோடுவதில்லை. இப்போது எங்கள் வீடு ஓர் அமைதிப் பூங்கா. முன்பு எங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை. இப்போது எங்கள் வாழ்க்கையில் மகிழ்ச்சி கரை புரண்டோடுகிறது," என்பதல்ல கிறிஸ்தவ வாழ்க்கையின் வெற்றி. இந்தக் காரியங்களுக்காக கர்த்த ருக்கு ஸ்தோத்திரம். ஆனால், நீங்கள் உங்கள் படுக்கையின்மேல் பெறுகிற வெற்றிதான் உங்கள்

முதல் வெற்றி. ஒவ்வொரு நாளும் ஒரு நேரத்தைக் குறித்து அந்த நேரத்தில் எழுந்து தேவனோடு நீங்கள் செலவழிக்கும் நேரம்தான் நீங்கள் பெறுகிற முதல் வெற்றியின் நேரம். எப்போது எழுந் திருக்க வேண்டும் என்பதை நீங்கள் தீர்மானித்துக்கொள்ளுங்கள். ஆனால், குறித்த நேரத்தில் எழுந் திருங்கள். 6 மணிக்கு எழுந்திருக்க வேண்டும் என்று குறித்திருக்கிறீர்கள். ஆனால், 6 மணிக்கு எழுந்திருக்கவில்லையென்றால் ஆண்டவராகிய இயேசு தம் சீடர்களைப் பார்த்து என்ன சொன் னாரோ அதைத்தான் நம்மைப் பார்த்தும் சொல்வார். “ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பெல வீனமுள்ளது” (மத். 26:41).

இதுதான் நம் நிலைமை என்றால் நாமும் எல்லாரையும்போல் மாம்சத்துக்குரிய மனிதர்களாக வாழ்ந்துகொண்டிருப்போம். தேவன் உங்களை நம்பி எதையும் ஒப்புவிக்கமாட்டார், ஒப்புவிக்க முடி யாது. ஏனென்றால், நீங்கள் இன்னும் பால்குடிக்கிற குழந்தைகளாகவே இருக்கிறீர்கள். இந்தப் பூமி யில் நமக்கு ஏதாவது வேண்டும் என்றால் நாம் மனிதர்களோடு சண்டைபோடுவோம், மனிதர்களோடு யுத்தம்பண்ணுவோம். “நம்முடைய போராட்டம் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் அல்ல.” கணவ னோடு அல்ல, மனிதனோடு அல்ல, பெற்றோர்களுடன் அல்ல, உடன் வேலைபார்க்கிறவர்களுடன் அல்ல, உடன் பயணம்செய்கிறவர்களுடன் அல்ல. “எப்போதும் எனக்கு உடைந்த இருக்கைதான் கிடைக்கிறது! என் இருக்கைக்குமேல் எப்போதும் ஒழுகிக்கொண்டிருக்கிறது! என் வண்டியை மேலா ளர் ஒழுங்காகப் பராமரிக்கவில்லை,” என்று புலம்பல். ஒருநாளும் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் சண்டைபோட வேண்டாம். அது மிகச் சிறிய மனிதர்கள் போடுகிற சண்டை. அப்பா அம்மாவோடு, அண்ணன் தம்பியோடு, அக்கா தங்கையோடு, உடன் வேலைபார்ப்பவர்களோடு...நம்முடைய யுத் தம் அந்தகார லோகாதிபதிகளோடும், சாத்தானோடும், அவனுடைய தூதர்களோடும், சேனையோடும் தான். இந்தச் சண்டையை காலைதோறும் தேவனோடு நேரம் செலவழிப்பதினால் நாம் வெல்ல முடியும். இது முதல் காரியம்.

## கோடு போட வேண்டும்

இரண்டாவது, எல்லாவற்றுக்கும் நாம் குறித்த நேரம் வைத்திருக்க வேண்டும். நம் கூட்டத்துக்குக் கூட நேரம் வைத்திருக்க வேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் முடித்துவிட்டு வெளியே போக வேண்டு மென்றால் போய்விட வேண்டும். உபவாசக்கூட்டம் 10மணி முதல் 12 மணிவரை என்றால் சரியாக முடித்துவிட்டுப் போய்விட வேண்டும். சகோதர சகோதரிகளுடன் பேசுவதற்கு நேரத்தைக் குறித்துக் கொள்ள வேண்டும். ஏன்? ஏனென்றால் குறித்த நேரம் இல்லையென்றால் நாம் பேசிக்கொண் டிருப்போம். இப்படி நேரத்தை மட்டுப்படுத்தவில்லையென்றால் நாம் இரவில் அரைமணிநேரம் தேவ னுடைய சமுகத்தில் உட்காருவதைத் தடுக்கும். எந்தக் காரியமாக இருந்தாலும் ஒரு முற்றுப்புள்ளி தேவை. இது இங்கு முடிய வேண்டும். ஆவிக்குரிய காரியம் உட்பட.

மிக முக்கியமாக மக்கள் வீட்டுக்கு வருவார்கள். ஒருவரைப் பார்க்கச் செல்வதற்குமுன் சொல்லி விட்டுப் போக வேண்டும். குறிப்பிட்ட நேரம்தான் செலவழிக்க வேண்டும் என்ற கலாச்சாரம் நம் நாட்டில் கிடையாது. மற்றவர்கள் ஓய்வு எடுத்துக்கொண்டிருக்கும் நேரத்தில் நாம் போவோம். கூட்டம் முடிந்தவுடன் “வீட்டுக்குப் போக வேண்டும், சமைக்க வேண்டும், பிள்ளைகளைப் பள்ளி கல்லூரிக்கு அனுப்ப வேண்டும், ஜெபிக்க வேண்டும், பின்பு கொஞ்சம் ஓய்வு எடுக்க வேண்டும்,” என்று நினைத் திருப்போம். அப்போது திடீரென்று ஒருவர் வீட்டுக்கு வருகிறார். இப்போது என்ன செய்வது? இதை எப்படிச் சமாளிப்பது? இது பெரிய பிரச்சினை.

என்னைப் பொறுத்தவரை நான் எப்படிச் சமாளிப்பேன் தெரியுமா? நான் உங்கள் வீட்டுக்கு 5.30க்கு வருவதாகச் சொல்லியிருந்தேன். ஆனால், நான் இப்போது 6 மணிக்கு வருகிறேன். அப்போது அவர்கள் என்ன சொல்ல வேண்டும்? “பிரதர் 5.30க்கு வருவதாகச் சொன்னீர்கள். அதை வைத்து நான் சில காரியங்களைத் திட்டமிட்டிருந்தேன். இப்போது 6 மணிக்கு வந்திருக்கிறீர்கள். நீங்கள் 5.30க்கு வந்திருந்தால் 1 மணி நேரம் செலவழித்திருப்பேன். 6 மணிக்கு வந்திருப்பதால் இப்போது அரை மணி நேரம்தான் செலவழிக்க முடியும்,” என்று சொல்வேன். “மற்றவர்கள் எந்த வேலையும் இல்லாமல் சும்மா இருக்கிறார்கள். சிஸ்டர் வீடுதானே, பிரதர் வீடுதானே! நாம் எப்போது வேண்டு மானாலும் போகலாம்,” என்று நாம் நினைக்கிறோம். அவர்கள் வேலைக்குப் போக வேண்டும், பிள்ளைகளைப் பார்க்க வேண்டும், சமைக்க வேண்டும், ஜெபிக்க வேண்டும், ஓய்வு எடுக்க வேண் டும். “பிரதர் ரொம்ப நல்லவர், அவர் வீட்டுக்கு எப்போது வேண்டுமானாலும் போகலாம்.” அப்படி யல்ல. நான் சொல்வேன். மனம் புண்பட்டு பின்பு வராமல் போனால் போகட்டும். 5.30 மணிக்கு வருவதாகச் சொல்லுகிறார்கள். 6 மணிக்குத்தான் வருகிறார்கள். சரி. “5.30 மணிக்கு என்னால் வர முடியாது. 6 மணிக்கு வரலாம் என்று இருக்கிறேன். வரலாமா?” என்று கேட்க வேண்டும். அப்போது

தாராளமாகச் சொல்லலாம். “பிரதர் அரைமணி நேரத்தை என்னால் சமாளிக்க முடியாது.” 5 மணி முதல் 6 மணிவரை ஒரு மணி நேரம் அவருக்கு செலவு செய்வதற்காக வைத்திருக்கிறோம். இப் போது 5.30க்கு அவர் வருகிறார். அரை மணிநேரம் செலவழித்தபின் தைரியமாகச் சொல்லலாம். “பிரதர் சமைக்கணும். போயிட்டுவர்றீங்களா”?

நான் இதை எதற்காகச் சொல்லுகிறேன், எதை கருத்தில் கொண்டு சொல்லுகிறேன் என்றால் சாத்தா னுக்கு ஒரு நோக்கம் இருக்கிறது. இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாகக் காரியங்களைத் தாமதப்படுத்தி இரவு 10, 10.30, 11 மணிக்கு நம்மைக் களைத்துப்போன நபராக மாற்றி விடுவான். அப்போது நேரே சாப்பிட்டுவிட்டு படுக்கையில் போய் விழுந்து விடுவோம். நம்மைக்கொண்டு தேவன் இந்தப் பூமியில் என்ன செய்ய விரும்புகிறாரோ அதை அவரால் சாதிக்கமுடியாது. நம்மைக் கொண்டு எவ்வளவோ வல்லமையான செயல்களை அவர் செய்ய விரும்புகிறார். பலத்த காரியங்களைச் செய்ய வேண்டும் என்று தேவன் எண்ணியிருப்பார். ஆனால், நாம் ஒரு துரும்பைப்போல் வாழ்ந்து சாவோம். இந்தப் பூமியில் வாழ்ந்தோம் என்பதற்கு எந்தச் சுவடும் இல்லாமல் மறைந்துவிடுவோம். தயவோடு ஆனால் உறுதியோடு உங்கள் நேரத்தைக் கொடுங்கள். எந்தத் திட்டமும் இல்லாமல், அறிவிக்காமல் வருகிறவர்களுக்கு 5 நிமிடங்களுக்குமேல் கொடுக்காதீர்கள்.

## மதிப்பீடு செய்தல்

மூன்றாவது, ஒரு குறிப்பைச் சொல்லுகிறேன். மதிப்பிடும்போது நன்றாக மதிப்பீடு செய்துகொள் ளுங்கள். இங்கிருந்து கல்லூரிக்குச் செல்வதற்கு 45 நிமிடம் ஆகும் என்றால், “இன்னும் 45 நிமிடத் தில் நான் அங்கு வந்து விடுவேன்” என்று சொல்லக்கூடாது. 1 மணி நேரம் ஆகும் என்று சொல்ல லாம். 75 நிமிடம் ஆகும் என்று சொல்வது இன்னும் நல்லது. சாப்பிடுவதற்கு 10 நிமிடம் என்பதற்குப் பதிலாக 20 நிமிடம் என்று வைத்துக்கொள்ளலாம். மதிப்பிடும்போது சரியாக மதிப்பீடு செய்ய வேண்டும். ஒரு மணி நேரத்தில் முடிக்கவேண்டிய வேலையை அரை மணி நேரத்தில் முடித்து விடுவேன் என்று திட்டமிட்டால் அந்தத் திட்டம் தோற்றுப்போகும். இப்படிப் போடுகிற திட்டம் தோற் றுப்போவதற்கென்றே போடப்படுகிற திட்டம். மாணவர்கள் தேர்வுகளுக்குமுன் ஒரு திட்டம் போடு வார்கள். 1ஆம் தேதி இந்தப் பாடத்தையும், 2ஆம் தேதி அந்தப் பாடத்தையும் படித்து முடிக்கப் போவதாகத் திட்டமிடுவார்கள். “மாணவர்களே, நீங்கள் என்ன படிக்கும் இயந்திரமா?” 1ஆம் தேதி படிக்க வேண்டிய பாடத்தை 2 நாட்கள் படிக்க வேண்டியிருக்கும். அதை ஒருநாளில் படிப்பதாகத் திட்டமிட்டிருக்கிறார்கள். இது தோற்றுப்போவதெற்கென்றே போடப்படுகிற திட்டம். யதார்த்தமாகத் திட்டமிட வேண்டும். சரி, பாடம் ஒன்று என்று போட்டிருக்கிறாயா? அன்று இரவு 12 மணிவரை என்ன படிக்கிறாயோ அது போதும். அடுத்த நாள் அடுத்த பாடத்துக்குப் போ. முதல் நாளில் முதல் பாடத்தைப் படித்து முடிக்கவில்லையென்பதற்காக அடுத்த நாளும் அந்தப் பாடத்தையே தொடர்ந்து படித்துக்கொண்டிருந்தால் 30 நாள் பாடத்திட்டம் முதல் நாளிலேயே தோற்றுவிட்டது.

இந்த மூன்று காரியங்களை நான் சொல்ல விரும்புகிறேன். முதலாவது, *காலையில் எழுந்திருப்பது.* அந்த இடத்தில் நாம் தோற்றுப்போய்விட்டால், பின்பு நாம் என்ன திட்டம் போட்டாலும் அது குழந்தை பிறக்கும்போதே செத்துப்பிறப்பதற்குச் சமம். காலையில் எழுந்திருப்பதில், குறித்த நேரத் தில் எழுந்திருப்பதில், தோற்றுப்போய்விட்டால் அந்த நாள் முழுவதும் எப்படி இருக்கும் என்று சொல்லவேண்டிய அவசியம் இல்லை. இரண்டாவது *எல்லாக் காரியங்களுக்கும் ஒரு முற்றுப்புள்ளி* வைக்கவேண்டும். குறிப்பிட்ட நேரத்தில் இதை முடிக்க வேண்டும். தேவைக்கு அதிகமான நேரத் தைக் கொடுக்கக்கூடாது. மூன்றாவது *யதார்த்தமாக மதிப்பிட வேண்டும்.* நான்காவது இன்னொன்று சொல்ல வேண்டும். *தோராயமாக ஒரு திட்டம் இருக்க வேண்டும்.* கடைக்குப் போவதில் நிறைய நேரம் செலவழிப்பதை நான் பார்த்திருக்கிறேன். நம்மைக் கடைக்குப் போக வைத்தே சாத்தான் நம் வாழ்க்கையைக் கெடுத்துவிடுவான் என்று தோன்றுகிறது.

## பயனுள்ள பாத்திரம்

நான் சொல்கிற இந்தக் காரியங்களைச் செய்தால் உங்கள் வாழ்க்கை சுபிட்சமாக இருக்கும். இதை அலட்சியம் பண்ணாதீர்கள். நான் சொன்ன எவ்வளவோ காரியங்களை நீங்கள் அலட்சியம் பண்ணி யிருக்கலாம். அதனால் பெரிய பாதிப்பு ஏற்படாமல் போயிருக்கலாம். தீமையோ, நன்மையோ ஒன்றும் நடக்காமல் போயிருக்கலாம். உன்னை வைத்து ஆயிரம் நன்மைகள் சாதிக்க வேண்டும் என்று தேவன் எண்ணியிருப்பார். அது எல்லாமே... ஜெபத்தின் மூலமாக வரவேண்டும். இந்த நன்மை உன் ஜெபத்தின்மூலம் வரவேண்டும். இவருக்கு..அவருக்கு...இப்படி பல நன்மைகள் உன் மூலம் மற்றவர்களுக்கு வரவேண்டும் என்று தேவன் வைத்திருப்பார். ஆனால், இந்தப் பாத்திரம்

பயன்படுத்தத்தக்க பாத்திரமாக இல்லாததால் எல்லா நன்மைகளையும் வழங்கமுடியாமல் போய் விட்டது.

இந்தக் கோட்பாடு நம் எல்லாருக்கும் பொருந்தும். காலைதோறும் இரவுதோறும் நாம் தேவனுடன் செலவழிக்கும் நேரம் மிக முக்கியமானது. இதில் தவறும்போது என்றைக்கு விடுமுறையோ அன் றைக்கு தேவனுக்கென்று நேரத்தை நாம் ஒதுக்க வேண்டும். தொலைபேசி வரும். தொலைபேசியை அணைத்துவையுங்கள். சரி, இன்றைக்கு அரைமணி நேரம் செலவழிக்க முடியாது. அது என்ன வாகும்? விடுமுறை நாள் வரும்போது விட்ட காரியங்கள் அனைத்தையும் சரி செய்யுங்கள். குறை களை சரிசெய்யுங்கள். ஜெபிக்கப்போவதற்குமுன் அம்மாவிடம் சொல்லுங்கள். “அம்மா, நான் ஜெபிக்கப்போகிறேன். கடைக்குப் போகிற காரியம் அல்லது வேறு ஏதாவது காரியம் இருந்தால் ஒரு மணி நேரம் கழித்துச் சொல்லுங்கள் அல்லது அவசர வேலை இருந்தால் சொல்லுங்கள். நான் உடனடியாக செய்துவிடுகிறேன்,” என்று சொல்லிவிட்டுப் போங்கள். இப்படித் திட்டமிட்டுக் கொள்ள லாம்.

### தேவனுக்காக முற்றுமுடிய இருக்க வேண்டும்.

தேவனோடு நமக்கு இப்படிப்பட்ட உறவு இருக்குமென்றால் நாம் ஒரு பாடலோடு வருவோம். ஒரு பாடல் கொண்டு வருவதுதான் கிறிஸ்தவ வாழ்க்கையின் உச்சக்கட்டம் என்று நான் சொல்லவில்லை. “ஆகையால் நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி முடமா யிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப் படுத்துங்கள்” *(எபி. 12:12, 13).* நெகேமியாவின் புத்தகத்தையும், 2 தீமோத்தேயுவையும் வாசி யுங்கள்.

தேவன் நமக்குத் தருகிற வேலைகளைப் பாதியில் விட்டுவிட வைப்பது சாத்தானுடைய ஒரு தந் திரம். தேவனுடைய வேலைகளை நாம் செய்யாமல் இருக்க மாட்டோம். ஆனால், அந்த வேலையை நாம் தொடர்ந்து செய்து முடிக்கமாட்டோம், முற்றுமுடிய செய்யமாட்டோம். இது நம்முடைய பெரிய பிரச்சினை. “தேவன் எனக்கு அப்படி என்ன வேலை தந்திருக்கிறார்? நெகேமியா வுக்கு எருசலேம் சுவரைக் கட்டுகிற வேலையைக் கொடுத்தார். எனக்கு அப்படிப்பட்ட வேலையைத் தந்ததுபோல் தோன்றவில்லையே!” என்று நீங்கள் நினைக்கலாம். நெகேமியாவுக்குக் கொடுத்ததுபோல் தேவன் எல்லாருக்கும் பெரிய வேலையைக் கொடுக்காமல் போகலாம். ஆனால், சுவரைக் கட்டுகிற வேலை ஒரு தனிமனிதன் செய்கிற வேலை அல்ல. நூற்றுக்கணக்கான மனிதர்கள் சேர்ந்து அந்த சுவரைக் கட்டினார்கள். இதன் பொருள் என்னவென்றால் ஒரு குடும்பம் இந்த இடத்திலிருந்து அந்த இடம் வரை சுவரைக் கட்டுகிறது. இன்னொரு குடும்பம் அந்த இடத்திலிருந்து தொடர்ந்து சுவரைக் கட்டு கிறது. தேவன் நமக்குப் பெரிய வேலையைத் தராமல் போகலாம். ஆனால், அவர் செய்கிற பெரிய வேலையில் நமக்கு ஒரு சிறிய வேலையைத் தருகிறார்.

படிக்கிறது ஒரு வேலை. தேவன் உனக்குப் படிக்கிற வேலையைக் கொடுத்திருக்கிறார். எனவே, நீ படிக்கிறாய். அதற்கு உன் அப்பா, அம்மா, மாமா, அத்தை எல்லாரும் உதவி செய்கிறார்கள். இது அம்மா அப்பா கொடுத்த வேலையல்ல. இது தேவன் கொடுத்த பொறுப்பு. தேவன் கொடுத்த வேலை, தேவன் கொடுத்த கடமை. அதுதான் நம் படிப்பாக, வேலையாக இருக்க வேண்டும். தேவனை அறியாத மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு மனப்பாங்கு இருக்காது. தேவனை அறியாத மக்களிடம், “எதற்காகப் படிக்கிறாய்?” என்று கேட்டால் அவர்கள், “படித்தால் நல்ல வேலை கிடைக் கும்? நல்ல வேலை கிடைத்தால், நல்ல சம்பளம் கிடைக்கும்,” என்று சொல்வார்கள். ஆனால் படிக்க வேண்டும் என்ற பொறுப்பை, வேலையை, கொடுத்தவர் யார்? தேவன். நாம் யாருக்குக் கடன்பட்டிருக்கிறோம்? தேவனுக்கு. நாம் மனிதனுக்குக் கடன்பட்டவர்கள் அல்ல, பெற்றோர் களுக்கோ அல்லது பல்கலைக்கழகத்துக்கோ அல்ல. நாம் தேவனுக்குக் கடன்பட்டிருக்கிறோம். “எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்” *(கொலோ. 3:24)* “பிரதர், படிப்பு தேவனுடைய வேலையா?” ஆம், இல்லை என்ற தவறை நாம் செய்துவிடக் கூடாது. “பிரதர், படிப்பது தேவனுடைய வேலையா? ஆம். காலையில் அரைமணி நேரம் ஜெபிப்பது, இரவில் அரை மணிநேரம் ஜெபிப்பது தேவனுடைய வேலை. ஞாயிற் றுக்கிழமை கூடுகைக்கு வருவது தேவனுடைய வேலைதான். “நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள்” *(1 கொரி. 10:31).*

இயேசு கிறிஸ்து 30 வருடம் தச்சுவேலை பார்த்தார். அது பிதா கொடுத்த வேலையா அல்லது யோசேப்பு கொடுத்த வேலையா? யார் கொடுத்த வேலை? "இது பிதா கொடுத்த வேலையில்லை. என்ன செய்வது? வயிற்றுப்பிழைப்புக்காக செய்துதானே ஆகவேண்டியிருக்கிறது?" என்று சொன்னாரா, நினைத்தாரா? இயேசு 30 வருடம் தச்சுப்பட்டறையில் தச்சனுடைய வேலையைச் செய்ய வேண்டும் என்று பிதா பணித்தார். எனவே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து தச்சு வேலையைச் செய்தார். இதைவிட நல்ல முன்மாதிரி என்னவுண்டு? "இயேசு ஆசிரமத்தில் வாழ்ந்தார். குருகுலத்தில் வாழ்ந்தார். காலையில் எழுந்தவுடன் கழுத்தளவு தண்ணீரில் நின்றுகொண்டு மந்திரம் சொன்னார்," என்று எழுதியிருந்தால் ரொம்ப கஷ்டமாக இருந்திருக்கும். அவர் காலையில் எழுந்து ஜெபித்தார். அது உண்மைதான். ஆனால் அவர் தச்சுப்பட்டறையைச் சுத்தம் பண்ணினார். தச்சு வேலை செய்தார். பொருட்களைக் கொண்டுபோய் விற்றார். அவர் இயல்பான மனித வாழ்க்கை வாழ்ந்தார்.

எனவே, படிப்பது தேவனுடைய வேலை. நம்மெல்லாருக்கும் தேவன் ஒரு வேலையைக் கொடுத்திருக்கிறார். இன்றைக்கு தேவன் வேலையைக் கொடுத்திருக்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இப்படிச் சொன்னார். "அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந் திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள் (யோவான் 4:35). இப்பொழுதே நிலங்கள் அறுவடைக்குத் தயாராக இருக்கின்றன," என்று இயேசு சொல்லுகிறார். ஆனால், நாம் "இன்னும் நாலு மாதம் செல்லட்டும். பின்பு வேலை வரும். இப்போது எனக்கு ஒரு வேலையையும் கிடையாது," என்று நாம் நினைக்கிறோம்.

படித்துமுடித்துவிட்டு வேலை தேடும் மக்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களிடம் "நீங்கள் என்ன செய்கிறீர்கள்?" என்று கேட்டால், "நான் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்," என்று சொல்வார்கள். அது தவறு. "நான் படித்துக்கொண்டிருந்த வேலை செய்தேன். இப்போது இன்னொரு வேலை தேடிக்கொண்டிருக்கிறேன்," என்று சொல்வதுதான் சரி. "வேலை இல்லை" என்று சொல்லக்கூடாது. இன்றைக்கு தேவன் ஒரு வேலை தந்திருக்கிறார். அந்த வேலை ஒருவேளை காலையில் 8 மணிக்குப் போய் மாலையில் 8 மணிக்குத் திரும்பிவருகிற வேலையாக இல்லாமல் போகலாம். அதற்குப் பதிலாக காலையில் 1 மணி நேரம் சமைக்கிற வேலை. அதன்பின் 1 மணி நேரம் படிக்கிற வேலை அல்லது காலையில் ஒரு கம்பெனியில் வேலை. அதன்பின் மாலையில் இன்னொரு வேலை. அது படிக்கிற வேலையாக இருக்கலாம். படிப்பது வேலையில்லையா? தேவன் வானத்தைத் திறந்து எதையாவது என் வாயில் போடுவார் என்று காத்திருப்பது அல்லது என் மூளையைத் திறந்து வைத்துக்கொண்டு தேவன் எனக்கு எல்லாப் பாடங்களையும் சொல்லித்தருவார் என்ற காத்திருப்பதுதான் வேலையா?

ஒரு பெரிய பிரச்சினை உண்டு. ஒரு வேலையைத் தொடங்கி விடுவோம். ஆனால், "ஒரு வேலை சில வாரங்கள், சில மாதங்கள், சில வருடங்கள் போகுமென்றால் அவர்கள் அதை முடிக்க மாட்டார்கள். களைத்துப் போவார்கள், சோர்ந்து போவார்கள். இது எங்களால் முடியாது என்று சொல்லி விடுவார்கள்," என்பது மனிதர்களுடைய மிகப்பெரிய பலவீனம் என்பது சாத்தானுக்கு நன்றாகத் தெரியும். இதனால் கோடிக்கணக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு அந்த வேலைகள் பாதியில் நிற்கும். இது சாத்தானின் பெரிய தந்திரம். ஆனால், தேவன் தாம் தொடங்கின எல்லா வேலைகளையும் முடிக்கிறார். பெரிய வேலைகளாகக்கூட இருக்கலாம். ஒழுங்கின்மையும் வெறுமையுமான இந்தப் பூமியில் தேவன் ஆறு நாட்கள் வேலை செய்து, ஆறாவது நாளின் முடிவில் அந்தப் பூமி எப்படி இருந்தது? "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது," என்று கண்டார். தேவன் தம் வேலையைத் தொடங்குவதற்குமுன் அந்தப் பூமி எப்படி இருந்தது? பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது? ஆறு நாட்களின் முடிவில் எப்படி இருந்தது? "தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது." தேவன் எவ்வளவு பெரிய வேலை செய்தார்? அவர் அந்த வேலையைப் பாதியில் விட்டுவிடவில்லை. ஏழாம் நாளில் தேவன் தம் கிரியைகளையெல்லாம், வேலைகளையெல்லாம், முடித்தபிறகு ஓய்ந்திருந்தார். எவ்வளவு பெரிய வேலையாக இருந்தாலும் அவர் செய்து முடிப்பார்.

சாத்தான் கெடுத்த இந்த உலகத்தை ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மீண்டும் இரட்சிப்பதற்காக இந்தப் பூமிக்கு வந்தார். அவர் சிலுவையில் "எல்லாம் முடிந்தது" என்று சொல்லி தம் ஆவியை விட்டார் அல்லது "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்றார். "வேறு வழியில்லை. இந்த யூதர்கள், இந்த ரோமப் போர்வீரர்கள், சாத்தான் ஆகிய எல்லாரும் சேர்ந்து என் ஆவியை என்னிடமிருந்து பிடுங்கிக்கொண்டார்கள்," என்று இயேசு சொல்லவில்லை. மாறாக "என்ன

வேலை செய்வதற்காக பிதா என்னை அனுப்பினாரோ அந்த வேலையை நான் செய்து முடித்து விட்டேன். ஆகவே, பிதாவே, என் ஆவியை நான் இப்போது உம் கைகளில் ஒப்புவிக்கிறேன்."

**ஓட்டத்தை ஓடுதல்**

நாம் எப்படி இந்தப் பூமியைவிட்டுப் போக வேண்டும் தெரியுமா? நாம் இங்கு தேவனுடைய நண்பர் களாக வாழ்ந்தால், "மகனே, நீ இந்தப் பூமியை விட்டுக் கடந்து செல்லவேண்டிய நேரம் நெருங்கி விட்டது," என்று தேவன் சொல்வார். அப்போது, "ஆண்டவரே நான் வாங்கிய கடனையெல்லாம் இன்னும் கட்டிமுடிக்கவில்லையே! என் பிள்ளைகளுக்குக் கல்யாணம் பண்ணிவைக்கவில்லையே!" என்று சொல்லாதீர்கள். இது ஏறக்குறைய, "ஐயோ! என் ஆண்டவனே, அது கடன் வாங்கின கோடரி யாயிற்றே! நான் என்ன செய்வேன்?" என்பதுபோல் இருக்கிறது. பல சமயங்களில் நாம் சாதாரண மனிதர்கள் பதறுவதுபோல் பதறிவிடுகிறோம். தேவனுடைய ஊழியக்காரர்களுக்குரிய கௌரவத்தை இழந்துவிடுகிறோம். "ஐயோ! நான் என்ன செய்வேன்?" "உன் வீட்டின் காரியங்களை ஒழுங்கு படுத்து." இரவு தூங்கப் போகும்போது, "பிதாவே என் ஆவியை உம் கைகளில் ஒப்புவிக்கிறேன்," என்று ஒருநாள் தைரியமாகச் சொல்லலாம். "என் ஆவியை சாத்தானும், இந்த ரோமப் போர்வீரர் களும், யூதர்களும் பறித்துக்கொண்டு போகிறார்கள் பிதாவே," என்று இயேசு கிறிஸ்து சொல்ல வில்லை. "என் ஓட்டத்தை முடித்தேன்" என்பது பவுலின் கூற்று. எனவே தேவனாலும் சரி, ஆண்டவ ராகிய இயேசு கிறிஸ்துவானாலும் சரி, அவருடைய அப்போஸ்தலர்களானாலும் சரி அவர்கள் தொடங்கின வேலையை முடிக்கிறார்கள்.

இப்படித் தொடங்கின வேலையைப் போராட்டம் இல்லாமல் முடிக்கமுடியுமா? ஓட்டத்தை முடித்தேன் என்ற வாக்கியத்துக்கு முந்தைய வாக்கியம் என்னவென்று தெரியுமா? "நல்ல போராட்டத்தைப் போராடினேன்." தனக்குப் போராட்டமே இருக்காது என்று பவுல் சொல்லவில்லை. "நான் புத்தகத் தைத் திறந்து வைப்பேன். புத்தகத்துக்குள் இருக்கும் எல்லாம் அப்படியே கடகடவென்று உள்ளே போக வேண்டும்." அப்படியல்ல.

படிக்கும்போது ஒரு பத்தி புரியவில்லையென்றால் உடனே ஒரு கேள்வி எழுகிறது. "நான் இந்தப் பாடத்தை எடுத்திருக்கக்கூடாதோ? நான் அந்தச் சபையை ஆரம்பித்திருக்கக் கூடாதோ? எனக்கு அப்பவே தெரியும். இது பிரச்சினையான வேலை. எங்கேயாவது போனோமா? சபையில் 2 மணி நேரம் உட்கார்ந்தோமா வந்தோமா? வீட்டுக்கு வந்து கறி வாங்கி குழம்பு வைத்தோமா, சாப்பிட் டோமா? மத்தியானம் தூங்கினோமா? சாயங்காலம் எழுந்து பொழுதைப்போக்கினோமா?" போன்ற பல கேள்விகள். போராட்டம் வந்தவுடன் நாம் என்ன செய்வோம்? எறும்பைப் பார்த்திருக்கிறீர்களா? அவை பயணம் செய்யும்போது நாம் இடையில் கையை வைத்தால் அவை திரும்பிச் சென்று விடுமா? அவை தன் முன்னோடிகளைத்தான் பின்பற்றுமேதவிர என்னதான் தடை வந்தாலும் பின்வாங்காது.

"என்னைப்போல் யாரும் கஷ்டப்பட்டதே இல்லை," என்று மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஒரு சின்ன தடை வந்தால் போதும். உடனே திரும்பிவிடலாமா என்றுதான் மக்கள் பார்ப்பார்கள். "தேவனே, 20 நாட்கள் அல்ல 20 வருடங்களாக இருந்தாலும் சரி. நான் இந்த நாட்டில் வாழ வேண் டும் என்றால் நான் வாழத் தயார். இது உம்முடைய வேலை என்றால் நான் எதையும் செய்யத் தயார்." ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 33 வருடம் இந்தப் பூமியில் தன் சொந்த வீட்டில் வாழ்வது போல் வாழ்ந்தாரா அல்லது எப்போது பிதாவிடம் செல்வோம் என்ற எதிர்பார்ப்போடு வாழ்ந்தாரா? உங்கள் கருத்தென்ன? இங்கேயே இருந்துவிடலாம் என்று நினைத்தாரா? இந்தப் பூமியில் வாழ்ந்த போது அவருக்கு மரணத்துக்கு ஏதுவான துக்கம் உண்டாயிருந்தது. நம்முடைய வாழ்க்கையில் நாம் பிரச்சினைகளைச் சந்திக்கும்போது அடிக்கிற பல்டி இருக்கிறதே! "நீங்கள் படித்துப்பாருங்கள். நீங்கள் வேலைசெய்து பாருங்கள். நீங்கள் இந்த வழியாகப் போய்ப்பாருங்கள், நீங்கள் இந்த அலுவலகத்தில் வேலைசெய்து பாருங்கள். நீங்கள் இப்படி பயணம் செய்து பாருங்கள். நீங்கள் இந்தக் குடும்பத்தில் வாழ்ந்து பாருங்கள்" என்று சொல்வார்கள். அவர் நம்மைப்போல் எல்லாவற் றிலும் சோதிக்கப்பட்டார். ஆயினும் அவர் பாவம் செய்யவில்லை. எந்த மனிதனும் இயேசு கிறிஸ்து சோதிக்கப்பட்டதுபோல் சோதிக்கப்பட்டதாகச் சொல்லமுடியாது. ஆயினும் அவர் வெற்றிச் சிறந்தார். "எல்லாம் முடிந்தது" என்று அவர் சொன்னபோது அவர் எப்படிப்பட்ட போரை முடித்தார் என்று தெரியுமா? இதை நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். வாழ்க்கையில் போராட்டம் இருக்கும், தடைகள் இருக்கும், சோர்வுகள் வரும், துவண்டுபோவோம், "பிதாவே, உமக்குச் சித்த மானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படிச் செய்யும்," என்று சொல்வோம். நாம் விட்டு

வந்த எகிப்துக்குச் சென்றுவிடலாமா என்றுகூடத் தோன்றும். நெகேமியாவையும் தீமோத்தேயுவையும் வாசியுங்கள்.

## நிறைவேற்றுதல், செய்துமுடித்தல்

திருவெளிப்பாட்டில் சர்தை சபையைப்பற்றி, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன். உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்று சொல்லப்பட்டிருக் கிறது. அந்த சபையைப்பற்றி தேவன் என்ன சொல்லுகிறார் என்றால், " உன் கிரியைகளை அறிந் திருக்கிறேன். நீ ஆரம்பிக்கிறாய். ஆனால் முடிப்பதில்லை." பவுல் தீமோத்தேயுவுக்குச் சொல்லு கிறார். "நான் என் ஓட்டத்தை முடித்தேன்." அதற்குமுன் அவர் சொல்லுகிறார். "நீ உன் ஊழியத்தை நிறைவேற்று." எங்கு பார்த்தாலும் ஒரே எதிர்ப்புகள். தேவனுடைய பிள்ளைகளுக்கு எதிர்ப்பு.

பவுலுக்கு எதிர்ப்பு. பவுல் இந்த உலகத்தைவிட்டுப் போகும் நேரம் வருகிறது. அப்போது தன் உத் தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதுகிறார். உன் ஊழியத்தை நிறைவேற்று. அதன் பொருள் என்ன? "ஒரு வலைதளத்தை உருவாக்கு. ஒரு மாதப் பத்திரிக்கை நடத்து. மெரினா கடற்கரையில் பெரிய கூட்டம் நடத்து," என்று சொல்லுகிறாரா? பவுல் சொல்லுகிறார். "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு. தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று." இதன் பொருள் என்ன? "கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல போர்ச்சேவகனாகத் தீங்கநு பவி. உன் ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும். அதாவது தொடங்கினதை முடிக்க வேண்டும். இப்படிச் செய்தால் அங்கு என்ன இருக்கும்? வேதனை, துன்பம் இருக்கும். சகித்துக்கொள். நீ சுவிசேஷத்தைப் பிரசங்கி, சமயம் வாய்த்தாலும் சமயம் வாய்க்காவிட்டாலும், காலம் சாதகமாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி." இது அவருடைய வேலைக்கு மட்டும் அல்ல. தேவன் நமக்கு ஒரு வேலை கொடுப்பார். வேலை கொடுத்துவிட்டால் எல்லாம் நமக்குச் சாதகமாக இருக் கும் என்று அர்த்தமா? நான் இதைத்தான் சொல்ல வருகிறேன். தேவன் நம்மை ஒரு வேலை செய்யச் சொல்வார். அது படிப்பாக இருக்கலாம். வேலையாக இருக்கலாம். சபையை நடத்துவதாக இருக்கலாம். உடனே எல்லாம் சாதகமாக இருக்கும் என்று அர்த்தமா? இல்லை. அது சாதகமாக இருந்தாலும் சரி, சாதகமாக இல்லாவிட்டாலும் சரி, நீ உன் பணியைச் செய்.

## தடைகளும், போராட்டங்களும்

நெகேமியா ஒரு நல்ல எடுத்துக்காட்டு. முதலாவது அவரைக் கேலி செய்கிறார்கள். "இந்த சாதாரண யூதர்கள்! இதைக் கட்டுவதற்கு இவர்களிடம் ஒன்றும் இல்லை. இவர்கள் மதில் சுவரைக் கட்டு வார்களா? ஒரு நரி ஏறிப்போனால் இந்தச்சுவர் இடிந்துபோகும்" என்று மக்கள் கேலிசெய்தார்கள். ஆனால் நெகேமியா விடவில்லை.

அடுத்ததாக அவர்களுக்குக் கோபம் வருகிறது. ஏனென்றால், இந்த யூதர்கள் மிகவும் தரித்திரராக இருந்தார்கள். அவர்களை விசாரிப்பதற்கு செல்வாக்குள்ள ஒரு யூதன் வந்துவிட்டான் என்ற கோபம்.

மூன்றாவது மிரட்டுகிறார்கள், "கொலை செய்துவிடுவோம்" என்கிறார்கள். அதற்கு அரசியல்வாதிகள் துணை போனார்கள். ஆலோசனை செய்வதற்காக நெகேமியா அழைத்தபோது தங்களுக்கு மிக முக்கியமான வேலை இருப்பதாகச் சொல்லி அவனுடைய எதிரிகள் வர மறுத்தார்கள். நெகேமியா வைக் கொல்லப்போவதாக தீர்க்கதரிசனம் உரைத்தார்கள். ஓடிப்போய் தேவாலயத்தில் ஒளிந்து கொள்ளச் சொன்னார்கள். இது அவர்களுடைய சூழ்ச்சி, அவன் தேவாலயத்தில் ஒளிந்து கொண் டால் மக்களையெல்லாம் கூட்டிக்கொண்டு வந்து காட்டி, "இதோ பாருங்கள் உங்கள் தலைவன் எப்படிப்பட்ட கோழை. உயிருக்குப் பயந்து எங்கே ஒளிந்திருக்கிறான் பாருங்கள்" என்று சொல்ல நினைத்தார்கள். அதை தேவன் வெளிப்படுத்துகிறார். "என்னைப்போன்ற மனிதன் உயிருக்குப் பயந்து ஒளிந்துகொள்வானோ?" தேவன் ஒரு வேலை தரும்போது மக்கள் கேலிசெய்வார்கள். கோபப்படுவார்கள், மிரட்டுவார்கள், உயிருக்கு ஆபத்து ஏற்படுத்துவார்கள். உங்களால் முடியாது என்று சொல்வார்கள். "இந்த யூதர்கள் ஏழைகள். எனவே, இந்த மதில் சுவரைக் கட்டுவதற்குத் தேவையான கல், மரம் ஆகியவைகள் எப்படி கிடைக்கும்?" என்று அந்த அரசியல்வாதிகள் நினைத் தார்கள். இந்த நெகேமியா ராஜாவுக்குப் பானபாத்திரக்காரனாக இருந்தான். வரும்போதே அனுமதிக் கடிதத்தோடுதான் வந்திருக்கிறான். அந்த சுவரின் வாசல்களைக் கட்டுவதற்கு என்னென்ன மரங்கள் வேண்டுமோ அதைக் காட்டில் வெட்டுவதற்கு அனுமதிக் கடிதத்தோடு வந்திருக்கிறான் என்று அவ னுடைய எதிரிகளாகிய அரசியல்வாதிகளுக்கு தெரியாது. மக்களுக்குப் பல காரியங்கள் தெரியாது. "இவள் எப்படிப் படித்து முடித்தாள்? இவனுக்கு எப்படி இப்படிப்பட்ட நல்ல வேலை கிடைத்தது? இவன் ஒன்றும் பெரிய அறிவாளி இல்லையே?" என்று மக்கள் ஆச்சரியப்படுவார்கள். மக்கள் உங்

களைக்குறித்து இப்படிச் சொன்னால் புண்பட்டுவிட வேண்டாம். அது உண்மைதான். மற்றவர்கள் தங்கள் கல்லூரியைக் குறித்தும், தங்கள் வேலையைக் குறித்தும் சொல்லும்போது நம்மைக்குறித்து நமக்கு வெட்கம் வரும். நான் உங்களை எச்சரிக்கிறேன். இப்படிப்பட்ட ஆட்களுக்கு முன்பாக நாம் வெட்கத்தோடு தலைகுனிந்து நிற்கவேண்டிய தேவையில்லை. மற்றவர்களுக்குத் தெரியாத ஒரு வளம் நமக்கு இருக்கிறது. பரம வளம்.

## அவருடைய ஆவியினால் ஆகும்

இது மட்டும் அல்ல. தேவாலயத்தைக் கட்டும்போது தங்களால் முடியாது என்று நினைத்து பாதியில் விட்டுவிடுகிறார்கள். "செருபாபேலுக்குச் சொல்லப்படுகிற கர்த்தருடைய வார்த்தை என்னவென்றால், பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல. என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். பெரிய பர்வதமே, நீ எம்மாத்திரம்? செருபாபேலுக்குமுன்பாக நீ சமபூமியாவாய். தலைக்கல்லை அவன் கொண்டுவருவான். அதற்குக் கிருபை உண்டாவதாக, கிருபை உண்டாவதாக என்று ஆர்ப்பரிப்பார்கள் (சகரியா 4:6, 7). இது இரண்டாவது கட்டம்.

முதல் கட்டம் எருசலேமின் மதிலைக் கட்டுவது. இரண்டாவது கட்டம் எருசலேம் ஆலயத்தைக் கட்டுவது. ஆலயத்தைக் கட்டும்போதும் அவர்கள் பாதியில் விட்டுவிட்டார்கள். ஏனென்றால் அவர்களால் காண முடியவில்லை. அவர்கள் ஏழை யூதர்கள், கட்டுவதற்குரிய பொருட்கள் அவர்களிடம் இல்லை. செருபாபேல் என்பவன் திரும்பிவந்த ஒரு யூத இளவரச வம்சத்தை சேர்ந்தவன். அவன்தான் ஏறக்குறைய தலைவன். அந்த வேலையைப் பாதியில் விட்டுவிட்டதால் தேவன் தீர்க்கதரிசிமூலமாகப் பேசுகிறார். "பலத்தினாலும் அல்ல பராக்கிரமத்தாலும் அல்ல." வேறு வார்த்தைகளில் சொல்வதானால் பலத்தினாலும் அல்ல, இராணுவத்தினாலும் அல்ல, படை பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, எதினாலே ஆகும்? என்னுடைய ஆவியினாலே ஆகும்."

உனக்குள் பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். நீ ஜெபம் பண்ணினால் பரிசுத்த ஆவியானவர் உனக்குள் நிரம்பி இருப்பார். ஜெபம் குறைந்தால் பரிசுத்த ஆவியானவர் இருப்பார் ஆனால் நிரம்பியிருக்க மாட்டார். அது எப்படி என்றால் உன்னிடம் மிகவும் பலம்வாய்ந்த பேட்டரி இருக்கிறது ஆனால் அதில் சார்ஜ் இல்லாததுபோல. நீங்கள் எப்படிப் படிப்பீர்கள்? எப்படி இந்த வேலையைச் செய்வீர்கள்? படை பலத்தினால் அல்ல. "நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது. ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல. அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக" (1 யோவான் 2:27). நாம் இயேசு கிறிஸ்துவில் எப்படி நிலைத்திருப்பது என்று இந்த அபிஷேகம் போதிக்கிறது என்பது உண்மைதான். எனினும், இந்த உலகத்தை உண்டாக்கினவர் தேவன். மனிதன் இதிலுள்ள காரியங்களுக்குப் பெயர் கொடுத்திருக்கலாம். இதைப்பற்றிய அறிவை தேவன் தம் பிள்ளைகளுக்கு தருவாரா தரமாட்டாரா? தேவனுடைய மக்களைப்போல் பரம அறிவு உள்ளவர்கள் இந்தப்பூமியில் வேறு யாரும் இல்லை. "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூர்ணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன். அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்" (யாக்கோபு 1:5). இந்தப் பூமியிலுள்ள மனிதர்களுக்கு இல்லாத ஞானம் பரத்திலிருந்து வருகிற ஞானம். உலகத்து மனிதர்களுக்கு உள்ள ஞானம் பூமியிலிருந்து வருகிற ஞானம். நம்முடைய ஞானம் மேலிருந்து வருகிற ஞானம்.

தானியேல் புத்தகத்தை நீங்கள் வாசித்துப் பாருங்கள். எப்பேர்ப்பட்ட சிறப்பான ஆவி! கனவைச் சொன்னால் ஒருவேளை மந்திரவாதிகள் அதற்கு விளக்கம் கொடுக்கலாம். ஆனால், கண்ட கனவையே சொல்ல வேண்டுமானால் அது தேவனிடமிருந்து வருகிற ஆவியேயல்லாமல் வேறென்ன? இந்தப் பூமிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு தேவன் பரம அறிவைத் தரமாட்டாரா? தருவார். ஏன் கிடைக்கவில்லை? கேட்கவில்லை. எனவே கிடைக்கவில்லை. "ஆண்டவரே, பூமிக்குரிய மனிதர்கள் புரிந்துகொள்வதைவிட அதிகமாகப் புரிந்துகொள்வதற்குப் பரம அறிவைத் தாரும்" என்று கேட்க வேண்டும். அது ஆவியினாலே ஆகும். இயேசு கிறிஸ்துவைக் குறித்து இப்படிச் சொன்னார்கள். "இவனுக்கு இந்த ஞானமும் பலத்த செய்கைகளும் எப்படி வந்தது? இவன் தச்சனுடைய குமாரன் அல்லவா?" (மத் 13:54, 55). அதனால் வேலையை பாதியில் விடக்கூடாது.

"பெரிய பர்வதமே, செருபாபேலுக்குமுன்பாக நீ சமபூமியாவாய்." ஒரு சின்னப் பிரச்சினையைப் பார்த்தவுடன் அது மலைபோல் தோன்றும். அவர்கள் தேவாலயத்தை முடித்து தலைக்கல்லை வைக்கும்போது, "கிருபையுண்டாவதாக, கிருபையுண்டாவதாக, பெரிய பர்வதமே செருபாபேலுக்கு முன்பாக நீ சமபூமியாவாய்," என்று ஆர்ப்பரிப்பார்கள். ஆவியானவர் அதைச் செய்வார். "யாக்கோபு

என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே, பயப்படாதே, நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்" (ஏசாயா 41:11). கிருபையென்றால் என்ன தெரியுமா? "தேவாலயத்தைக் கட்டி முடிக்கும்போது நாங்கள் எங்களுடைய இரும்பு, செம்பு, புத்திசாலித்தனம், மரம், ஆட்கள் ஆகியவைகளை வைத்து இதைக் கட்டவில்லை," என்பதுதான் கிருபை. படிப்பை முடிக்கும்போது அல்லது ஒரு வேலையை முடிக்கும்போது அல்லது இந்த வாழ்க்கையை முடிக் கும்போதுகூட எப்படி முடிக்க வேண்டும் தெரியுமா? கிருபை, கிருபை, கிருபை, "முடிந்தது. எல்லாம் முடிந்தது. என் ஓட்டத்தை முடித்தேன். நல்ல போராட்டத்தைப் போராடினேன்." நல்ல போராட்டம் என்றால் என்ன பொருள்? மோசமான போராட்டம் என்றால் என்ன பொருள்? போராட்டத்தில் நமக்கு வெற்றி கிடைத்தால் அது நல்ல போராட்டம். தோல்வி கிடைத்தால் அது மோசமான போராட்டம். எப்படி வெற்றி பெற்றேன். படைகளினால் அல்ல.

அது இல்லை இது இல்லை என்று சொல்வதற்கு நம் வாழ்க்கையில் 1000 காரியங்கள் இருக்கும். தேவாலயத்தைக் கட்டும்போது நாம் அங்கிருந்திருந்தால் என்ன சொல்லியிருப்போம்? "கல் இல்லை, செங்கல் இல்லை. இரும்பு இல்லை. அவர் சீக்கிரம் செய்துமுடித்து விடுகிறார். எனக்கு நேரம் ஆகிறது. அவர் ஒரு தடவை படித்தால் படித்து முடித்துவிடுகிறார். நான் பலமுறை படித் தாலும் புரியவில்லை." அப்படிச் சொல்லாதீர்கள். "பெரிய பர்வதமே, செருபாபேலுக்குமுன் நீ சமபூமி யாவாய்." தலைக்கல்லை வைக்கும்போது "கிருபை, கிருபை, கிருபை" என்று ஆர்ப்பரித்தார்கள். நீ படித்து முடிப்பாய் என்ற நம்பிக்கை இல்லாமல் போகலாம். ஆனால் படித்து முடிக்கும்போது "கிருபை, கிருபை" என்று முழங்குவோம். 80 வயதைத் தொடுவோம் என்ற நம்பிக்கை இல்லாமல் போகலாம். ஆனால் 81யைத் தொடும்போது "கிருபை, கிருபை" என்று ஆர்ப்பரிப்போம், கிருபை என்றால் என்ன? நமக்குக் கிடைக்கிற பரலோக வளங்களே கிருபை.

### பரம வளங்கள்

நெகேமியாவுக்கு வளங்கள் எங்கிருந்து கிடைக்கின்றன என்று நெகேமியாவின் எதிரிகளுக்கு தெரி யாது. இவன் ஏழை அல்லவா? அவர்களுக்குத் தெரியாத விஷயம் என்னவென்றால் இவன் ராஜா வுக்கு மிகவும் நெருங்கியவன். ஒருமுறை எதிரிகள் வந்து எருசலேமை முற்றுகை போட்டுவிடு கிறார்கள். முற்றுகை போடும்போது எதிரிகள் நகரத்துக்குள் வருகிற நீர்நிலைகளை அடைத்துவிடு வார்கள். தண்ணீர் இல்லாவிட்டால் அவர்கள் எதிரியிடம் சீக்கிரம் சரணடைந்துவிடுவார்கள். நீண்ட நாட்களாக எருசலேம் சரணடையவில்லை. என்ன காரணம் தெரியுமா?

எசேக்கியா என்ற ஒரு ராஜா இருந்தான். அவன் அரசாண்ட காலத்தில் இது நடந்தது. எருசலேமுக்கு ரொம்ப தூரத்தில் ஒரு நீர்நிலை இருந்தது. பூமிக்கு அடியில் ஒரு கால்வாய் கட்டி தண்ணீர் எருசலேம் நகரத்துக்கள் வரும்படிச் செய்திருந்தான். எனவே, பட்டணத்திற்குத் தண்ணீர் கிடைத்துக் கொண்டேயிருக்கும். ஆனால், இது எதிரிக்குத் தெரியாது. எனவே முற்றுகைபோட்ட எதிரிகள், "இத் தனை நாட்கள், மாதங்கள் ஆயிற்று. எப்படி இவர்கள் இன்னும் சரணடையாமல் இருக்கிறார்கள்?" என்று நினைப்பார்கள். அதுபோல எதிரியாகிய சாத்தானுக்கு ஆச்சரியமாக இருக்கும். "இந்நேரத் துக்கு இவன் செத்திருப்பான் என்று நினைத்தோம். உயிரோடிருக்கிறானே, எப்படி?" மற்றவர்களுக் குத் தெறியாத ஒரு நீர்நிலை, வற்றாத நீர்நிலை இருக்கிறது. யார் அவர்? இயேசு கிறிஸ்து யாருக்கும் தெரியாத பரம வளங்களை நமக்கு இரகசியமாகத் தந்து கொண்டிருக்கிறார். மனிதர் களால் இதை இனங்காணமுடியாது. விவரிக்கவும் முடியாது. பெரிய மலை எப்படி சமபூமியாகும்? "இவனுடைய அப்பா பெரிய ராஜா இல்லை, இவளுடைய அம்மா பெரிய ராணி இல்லை. எப்படி ஆகும்?" மற்றவர்கள் அறியாத ஒரு பரம வளம் நமக்கு உண்டு. "பலத்தினாலும் அல்ல, பராக்கிர மத்தினாலும் அல்ல, எல்லாம் என்னுடைய ஆவியினாலே ஆகும். " தேவன் நமக்கு அளித்த பொறுப்பை, தேவன் நமக்கு அளித்த வேலையை நாம் பாதியில் நிறுத்தக்கூடாது. தேவனைப் போல், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப்போல், அவருடைய அப்போஸ்தலர்களைப்போல், அவர்களுடைய சீடர்களைப்போல், நெகேமியாவைப்போல் நமக்கு ஒரு வளம் உண்டு. ஆனால் இந்த வளத்தோடு நாம் எப்போதும் உறவு வைத்துக்கொள்ள வேண்டும். நெகேமியாவின் காலத்தில் அவர்கள் சுவரைக் கட்டினபோது ஒரு கையால் சுவரைக் கட்டினார்கள். இன்னொரு கையில் ஆயு தம் வைத்திருந்தார்கள்.

எபிரெயரில் வாசித்தோம். நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் நிமிர்த் துங்கள். கைகள் வேலை செய்வதற்காக. முழங்கால்கள் ஜெபிப்பதற்காக, ஒரு பக்கம் நாம் வேலை செய்ய வேண்டும். இன்னொரு பக்கம் ஜெபிக்க வேண்டும். வேலை செய்யும்போது சோர்ந்து போவோம். எனவே ஜெபிக்க வேண்டும். "இவ்வளவுதான். இதற்குமேல் முடியாது," என்று சொல்

லக்கூடாது. கைகளால் உழைக்க வேண்டும். படிக்க வேண்டும். வேலை செய்ய வேண்டும். முழங்கால்களை முடக்கி ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கும்போது பரம வளங்களைப் பெற்றுக் கொள் வோம். எந்த மனிதனும் காணமுடியாத, கேட்கமுடியாத, அனுபவிக்கமுடியாத, புரிந்துகொள்ள முடியாத வளங்களைத் தேவன் நமக்குத் தருவார்.